

Long-Term Care Home Update

*Community Newsletter*

Lakeridge Health

**நவம்பர் 2021**

## நவம்பர் மாதத்தில் கட்டுமானப் பணி முன்னேற்றம்

கடந்த வருடம் கோடை பருவகாலத்தின் பொழுது மாகாண அரசு Lakeridge Health (லேக்றிட்ஜ் ஹெல்த்) மற்றும் Infrastructure Ontario (இன்பிறாஸ்றக்சர் ஒன்ராறியோ) அமைப்புகளுடன் சேர்ந்து ஒரு பங்காண்மைக் கூட்டுமுயற்சியாகப் புதிய ஒரு நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்தினை ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்கு அருகில் அமைக்கும் என்று அறிவித்து இருந்தது. விரைவுபடுத்திய ஒரு கட்டுமானச் செயல்முறை இதற்கு உபயோகிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஜனவரி 2021 மாதத்தின் பொழுது PCL Construction (பிசிஎல் கொன்ஸ்றக்ஷன்) நிறுவனத்தின் தொழில் குழுவினர் இந்த இல்லத்துக்கான அத்திவாரத்தை வெட்டி இருந்தனர். இதனை அடுத்து வந்த 11 மாத காலத்தின் உள்ளாக அவர்கள் இப்பொழுது கட்டிடத்தை எழுப்பி இவ்வீட்டுக்கான உலர்சுவர், தரை அமைப்பு மற்றும் சுவர்ப்பூச்சு ஆகியவற்றை முடிக்கும் தறுவாயில் உள்ளனர். வீட்டின் அமைப்பு அடங்கிலும் உள்ள பல்வேறு பகுதிகளின் இறுதித் தோற்ற வேலையில் விசேட கவனம் செலுத்தப்பட்டவாறு கட்டுமான வேலை தொடர்கிறது. உருவாகும் ஆறு கட்டிடத் தளங்களில் இரண்டின் உட்புற அமைப்பு வேலை இப்பொழுது பெரும்பாலும் பூர்த்தியடைந்து உள்ளது. கட்டிட ஸ்தலத்தில், கிட்டிய அளவில் 400 தொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் வேலை செய்து வருகின்ற இத்தருணத்தில், ஒவ்வொரு இரண்டு வார காலத்திலும் இனிமேல் புதிதாக ஒரு தளம் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிகச் சமீபத்தில் கட்டிடத்தின் இரண்டாவது தளம் பூரணமாக அமைக்கப்பட்டு முடிந்துள்ளது. தளபாடங்கள், ஒளி வழங்கும் கருவிகள் மற்றும் செயல்படத் தயாராக உள்ள கழிவறை ஆகியன அடங்கிய புத்தம் புதிய வதிவிட அறைகள் இதில் அடங்கி உள்ளன.

எதிர்வரும் 2022 ஆண்டின் பொழுது வதிவாளர்கள் இந்த இல்லத்தில் வசிப்பதற்கு வரும்பொழுது, அவர்கள் கொண்டுவரும் சொந்தக் கலைப் பொருட்கள், புகைப்படங்கள் மற்றும் விருப்பமான உடைமைகளின் துணையுடன் இங்குள்ள ஒவ்வொரு அறையும் புத்துயிர் பெறும் என்ற எண்ணம் எமக்கு புதிய ஓர் உற்சாகத்தைத் தருகிறது.

இங்கு இப்பொழுது இரண்டு மின் உயர்த்திகள் (elevators) பொருத்தப்பட்டு, தகுந்த உறுதித் தகைமை அங்கீகாரம் பெற்றனவாக செயற்பட்டு வருகின்றன. இரண்டு மின் உயர்த்திகளும் பூரணமான முறையில் செயல்படும் இத்தருணம் கட்டுமான வேலைக் குழுவினர் இவற்றைப் பயன்படுத்தி உபகரணங்களையும் உபயோகப் பொருட்களையும் மேலெடுத்துச் சென்று வருகின்றனர்.

இந்த இல்லத்தின் வெளிப்புறத்தில் சமீபகாலமாகச் சில மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை நீங்கள் கவனித்து இருக்கக் கூடும். கட்டிடத்தின் வெளிப்பக்கமாக இருந்த பொருள் உயர்த்தும் கருவிகளும் முன்பு வேலையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு பாரம்தூக்கும் இயந்திரங்களும் வேலை ஸ்தலத்தில் இருந்து அகற்றப்பட்டு விட்டன. பக்கச் சுவர் அமைப்பு உருவாக்கம் முடிவுறும் நிலையில் உள்ள இச்சமயம் இல்லத்தின் தோற்றம் வெள்ளை, செம்மஞ்சள், பழுப்பு நிறங்களில் காணப்படுகிறது. வீதிகளின் வலையமைப்பு வடிவம் முடிவுறும் கட்டத்தில் இருப்பதுடன் சுற்றாடல் நிலத் தோற்றப்பணி ஆரம்பித்து உள்ளது. கழிந்து கொண்டு செல்லும் ஒவ்வெரு நாளும் இங்குள்ள காட்சி ஒரு கட்டுமான ஸ்தலத்தில் இருந்து மக்கள் வதியும் இல்லமாக மாறுவதைக் காணலாம். இல்லத்துக்குரிய லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பைச் சேர்ந்த பணிக்குழுவினர், இனி அங்கு 320 நபர்கள் வதிவாளர்களாக குடிபுகுவதற்கு என்று அதனைத் தயார்ப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்!




புதிதாக எழுகின்ற நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தின் கிழக்குப் பகுதியின் ஒரு தோற்றம் (நவம்பர் 6, 2021)

## இல்லத்தின் உட்புறம் நீங்கள் காணும் ஆரம்ப தோற்றம்



இல்லத்தின் இரண்டாவது தளத்தில் காட்சிக்கென போலியாக ஏற்படுத்திய ஒரு வதிவாளர் அறை



காட்சிக்கென ஏற்படுத்திய போலி வதிவாளர் அறையுடன் இணைக்கப்பட்டு உள்ள தனிநபர் கழிவறைத் தோற்றம்

## நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்துக்கான பெயர் பற்றிய புதிய தகவல்

இவ்வருட இலையுதிர் பருவகாலத்தின் பொழுது நடாத்தப்பட்ட ***நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்துக்குப் பெயரிடும் சமூகக் கருத்துக் கணிப்பு*** நிகழ்வில் டூறாம் பிரதேசத்துக்கும் அதற்கு அப்பாலும் இருந்து பங்குபற்றிய பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் நாம் நன்றி கூற விரும்புகிறோம். இந்த இல்லத்துக்குப் பெயரிடும் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் எங்களுக்கு அனுப்பி இருந்த கருத்துக் கணிப்புகளின் எண்ணிக்கை காட்டி நிற்கிறது. உங்களுடைய மீள்தரவின் அடிப்படையில் எமது சமூகத்தின் மிகச் சிறந்த இயல்புகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு பெயரினை உருவாக்கித் தெரிவு செய்யும் முயற்சியில் நாம் தீவிரமாக உழைத்து வருகிறோம். பங்குபற்றிய எல்லோருக்கும் நாம் மீண்டும் ஒரு முறை நன்றி கூறுகிறோம். தெரிவு செய்யப்படும் பெயரினை விரைவில் எமது சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்ளும் நாளை நாம் எதிர்நோக்குகிறோம்.

## ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலையில் வருகையாளர் வாகனம் நிறுத்தும் ஏற்பாடு

ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்கு அருகாமையில் புதிதாக ஒரு வாகனம் நிறுத்தும் இடத்தை அமைக்கும் கட்டிடப் பணி தொடர்ந்து வேகமாக முன்னேறி வருகிறது. திட்டமிட்டதற்கு ஏற்ப உரிய நேரத்துக்கு வேலை நடைபெற்று வருவதுடன் அடுத்த வருடம் இது பூரணமடைந்து விடும். குறித்த காலத்தில். பணியை நிறைவேற்றுவதற்காக வாகனங்கள் நிறுத்தும் ஸ்தலத்தில் தற்பொழுது பாரம்தூக்கும் இயந்திரங்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன. இதன் காரணமாக ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்குரிய வாகனம் நிறுத்தும் பகுதிகளில் தற்காலிகமாக இடவசதிச் சிரமங்கள் சிலவற்றை நாம் சந்தித்து வருகிறோம்.

இத்தடங்கல் நிலைமையினால் உருவாகக் கூடிய அசௌகரிய அனுபவம் எதற்கேனும் எம்மைச் சுற்றியுள்ள சமூகத்து மக்களிடமும் வைத்தியசாலை வருகையாளர்களிடமும் நாம் மன்னிப்புக் கோர விரும்புகிறோம். பாதுகாப்பான, சமமாகச் சந்தர்ப்பம் கொடுக்கின்ற, யாவருக்கும் ஏற்ற அணுகும் முறை வசதிகளுடன் கூடிய நிறுத்தல் ஏற்பாட்டினை நோயாளர்கள், வருகையாளர்கள் மற்றும் அத்தியாவசிய பராமரிப்புப் பங்காளர்கள் ஆகிய எல்லோருக்கும் வழங்குவதே எமது முன்னணிக் கடமையாக உள்ளது. வாகனம் நிறுத்தும் வெற்றிடங்கள் குறைக்கப்பட்டு உள்ள இந்த நிலையில், எமது நோயாளர்கள் யாவருக்கும் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறோம். தயவு செய்து வாகனம் நிறுத்துவதற்கான ஒரு வெற்றிடத்தைத் தேடிக் கண்டு பிடிக்கத் தேவையான நேரத்தை முன்கூட்டியே ஒதுக்கிக் கொண்டு வாருங்கள். உங்களுக்கு என வரையறுக்கப்படும் சந்திப்பு நேரத்தின் பொழுது பிரசன்னமாக இருப்பதை இது உறுதி செய்யும். பொதுசன போக்குவரத்து வாகனங்களை உபயோகிக்கக் கூடியவர்களாக இருப்பவர்கள் அல்லது தமது சந்திப்புக்கென வாகனங்களில் அழைத்து வரப்படக் கூடியவர்களாக உள்ளவர்கள் தயவு செய்து வாகனங்களை ஓட்டி வருவதற்குப் பதிலாக முன்கூறிய முறைகளை மாற்று வழிகளாகக் கைக்கொள்ள முயலவேண்டும் என்று ஊக்கமளிக்க விரும்புகிறோம்.

வாகனம் நிறுத்துமிடம் பூரணமாக நிறுவப்பட்டு முடியும் பொழுது, ஏறக்குறைய 500 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வெற்றிடங்கள் அமையும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இதில் தேறுமானமாக 200 வெற்றிடங்கள் வைத்தியசாலை மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு நோயாளர்கள், வதிவாளர்கள், வருகையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு என்று புதியனவாக விசேடமாக ஒதுக்கப்பட்டனவாக உள்ளடங்கும். இன்றைய நிலையில் நீங்கள் காட்டும் புரிந்துணர்வு மற்றும் பொறுமைக்கு நாம் உங்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூற விரும்புகிறோம். ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலைக்கு சமூகத்தினர் தொடர்ந்து காட்டி வரும் ஆதரவுக்கு நாங்கள் எத்துணை நன்றிக் கடன் பூண்டிருக்கிறோம் என்பதை இங்கு வலியுறுத்தவும் விரும்புகிறோம்.

## விடுமுறை நாட்களின் காலம் நெருங்கும் நேரம்

வேலை நடைபெறும் வேகத்தின் உந்தல் வினை நிலையினைப் பேணுவதற்கு ஆகவும், குறித்த நேரத்தில் இல்லத்துக்கான வேலையை பூர்த்தி செய்வதற்கு ஆகவும் இந்த விடுமுறைக்காலம் முழுவதிலும் பணிக்குழுக்களில் பலவற்றை சேர்ந்தவர்கள் தொடர்ந்து இல்லத்துக்கான கட்டுமான வேலையில் ஈடுபட்டு வருவர். டூறாம் சமூகத்துக்கு மிகவும் முக்கியமாக உள்ள இந்த ஆக்கத் திட்டத்துக்கு என்று கடுமையாக உழைத்து வருகிறவர்களாக உள்ள PCL நிறுவன அமைப்புப் பணிக்குழுவினரின் அர்ப்பணிப்பினை லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு அங்கீகரித்து நன்றி கூற விரும்புகிறது.

## தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்

எமது நீண்டகாலப் பராமரிப்பு இல்லம் பற்றிய உங்களுடைய மீள்தரவு மற்றும் கேள்விகள் லேக்றிட்ஜ் ஹெல்த் அமைப்பின் பணிக்குழுவினருக்கு மிகவும் முக்கியமானவையாக அமைகின்றன.

உங்களிடம் கேள்விகள் உண்டு என்றால் அல்லது இல்லம் பற்றிய மேலதிக தகவலினை நீங்கள் பெறுவதற்கு விரும்பினால், தயவு செய்து தொலைபேசியில் அழையுங்கள் **905-576-8711 தொடரெண் 34167,** அல்லது **AjaxLTC@lh.ca** முகவரிக்கு எந்நேரத்திலும் மின்னஞ்சல் அனுப்புங்கள். தொடர்ந்து வெளியிடப்படுகின்ற புதிய தகவலினை அறிய நீங்கள் **www.lh.ca** என்ற எமது இணையத் தளத்துக்கு வருகை தரலாம், அல்லது டுவிற்றர் **(Twitter)** மற்றும் முகநூல் **(Facebook)** பக்கங்களில் லேக்றிட்ஜ் ஹெல்த் அமைப்பினைப் பின் தொடரவும் முடியும்.